1973 மார்ச் 10]

கைத்தறி நெசவாளர்கள்

* 318 வினு—திரு. இ. சி. ஆ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் கைத்தறி நெசவாளர் வாழ்க்கை நிலையை ஆராய்வதற்கென குழு ஏதேனும் நியமிக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: ஆம், அமைப்பு முறையிலே இல்லாத பல்வேறு தொழிலாளர்களின் தொழில்களை நிலையாக்குவதற்கும், வீட்டு வசதி, மருத்துவ வசதி போன்றவைபற்றி செயற்குறிப்பு தயாரித்து அனுப்புவதற்கும் அண்மையிலே ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவையே கைத்தறித் தொழிலாளர் நிலைபற்றி ஆய்வு செய்வதற்கு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அந்தக் குழு தனது அறிக்கையை விரைவிலே அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி: இந்தக் கைத்தறியாளர்களுக்காக அமைக்கப் பட்ட குழு எந்தக் காலத்திற்குள் தன்னுடைய ரிப்போர்ட்டை சமர்ப்பிக்க வேண்டுமென்று ஏதாவது உத்திரவு போடப்பட்டிருக்கிறதா? இப்படிப் பரிசிலனை செய்துகொண்டிருப்பதிலே தாமதம் ஏற்படுவதால் அந்தத் தொழி லாளர்கள் எல்லாம் தங்களுக்கு நன்மை கிடைக்குமா என்று அச்சப்பட்டுக் கொண்டிருக்கிறர்கள். எனவே இது சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் அறிவிப்பு ஏதாவது செய்வார்களா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: இந்தக் குழு 6 மாத காலத்திற்குள் பரிசிலனை செய்து அறிக்கை அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட் டிருக்கிறது. விரைவிலே அனுப்பும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்தக் குழு தன்னுடைய பரிந்துரை களை அனுப்புவதற்கு எவ்வளவு காலம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. கால வரையறை நீட்டித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறதா? இல்லையென்ருல் உடனடி யாகப் பரிந்துரைகளை அனுப்பச் சொல்வதற்கு முயற்சி எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: ஏற்கனவே நான் குறிப் பிட்டதைப்போல் விரைவிலே சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்று சொல்லப் பட்டிருக்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

திரு. என். மருதாசலம்: இந்தக் குழுவில் யார் யார் அங்கம் வகிக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: சட்ட மன்ற உறுப்பினர்கள், ஒரு செயலாளர். இந்தக் குழு 15 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. விவரம் மேற்கொண்டு இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

திரு. ஆ. பாரந்தாமன்: இந்தக் குழுவின் பரிந்துரைகளின்மேல் அதைப்பற்றி மாநில அரசு முடிவு எடுக்குமா? அல்லது மத்திய அரசின் ஆலோசனை பெறப் பட்டு முடிவு எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: குழு தன் அறிக்கையை எந்த வகையிலே அளிக்கிறது என்பதை அறிந்த பிறகுதான் திட்டவட்டமாக நாம் எந்த முடிவையும் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

Patta Pass Books to Ryots

*319 *Q.*—THIRU K. PALANISWAMY: THIRU S. DURAISWAMY: Will the Hon. the Minister for Revenue be pleased to state whether there is any proposal to issue Pass Books to the ryots who avail of the various Government lands to facilitate repayment?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நில உடைமையாளர்களுக்கு நில உடைமைக் குறிப்பேடுகள் வழங்குவதற்கான திட்டத்திற்கு அரசு 7—10—1972 தேதியிட்ட வருவாய்த்துறை எண். 2649-ல் ஒப்புதல் அளித்துள்ளது. அவ்வாணையின் நகல்@ நில உடைமைக் குறிப்பேட்டுடன் இப்பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, to get Government loans, the agriculturists have to submit solvency certificates or details of their property. In many cases the village officers do not

---

@ 408-410 பக்கங்களில் ஆணையின் நகல் மட்டும் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது. குறிப்பேடு இத்துடன் அச்சிடப்படவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS